மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்கள், இலங்கை அரசினால் சிறை பிடிக்கப்படுகின்ற நிலைமையை அறிந்து இதயதெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழக மீனவர்களின் பாரம்பரிய உரிமையைக் காத்திட நிலையான குத்தகையே நிரந்தரத் தீர்வாகும் என்றும், இந்திய அரசு இலங்கை அரசைத் தொடர்புகொண்டு இலங்கை கடல் பகுதியிலே உரிமை பெற்ற இந்திய மீனவர்கள் மீன் பிடிக்க அனுமதிக்க வேண்டுமென்றும் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே இவர்களுடைய பாதுகாப்பு நிச்சயமாக தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 91, திரு. ப. அரசன், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

91—

தொழிற்சாலை

***27929—திரு. ப. அரசன்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதியில் நீண்ட கடற்கரைப் பகுதிகள் உள்ளதால் ஜெகதாப்பட்டினம் அருகில் மீன் சார்ந்த தொழிற்சாலை ஒன்று உருவாக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புதுக்கோட்டை மாவட்டம், ஜெகதாப்பட்டினம் அருகில் மீன் சம்பந்தப்பட்ட தொழிற்சாலை உருவாக்கும் திட்டம் ஏதும் தற்போது துறையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. அரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்கள் வருடத்தில் 12 மாதங்கள் மீன் பிடிக்கச் செல்லமுடியாது. அதற்காகத்தான் அரசுகூட 4, 5 மாதங்களுக்கு நிவாரணம்கூட கொடுக்கிறது. மீனவர்கள் மீன் பிடித்து வருகிறபோது, வலையிலே சங்காயம் என்கிற ஒரு பொருள் அந்த வலையோடு சேர்ந்து

2003 நவம்பர் 7]

வந்துவிடுகிறது. மீனவர்களுக்கு அதனுடைய அருமை தெரியவில்லை. இந்தச் சங்காயத்திலேயிருந்து கோழித் தீவனங்களெல்லாம் தயாரிக்கிறார்கள், ஆகவே மீனவர்களுக்கு ஒரு பயிற்சி அளித்து, அந்தப் பகுதியிலே இருக்கிற மீனவர்கள், மீனவப் பெண்கள், கோழித் தீவனம் தயாரிப்பதற்கு, அந்தச் சங்காயத்தை உபயோகப்படுத்தி, கோழித் தீவனத் தொழிற்சாலை அமைப்பதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அரசு சார்பில் இல்லாவிட்டாலும், தனியாக இதுபோன்ற தொழிற்சாலையை அமைப்பதற்கு நிறைய பேர் வருகின்றார்கள். அதுபோன்று தனியாக யாராவது தொழில் செய்வதற்கு முன்வருவார்களேயானால் அதற்கு வேண்டிய உதவிகளை இந்த அரசு செய்து கொடுக்கும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஏ. எஸ். கண்ணன்.

திரு. ஏ. எஸ். கண்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் பழவேற்காடு உட்பட, ஏறக்குறைய 30-க்கும் மேற்பட்ட குப்பங்கள் இருக்கின்றன. அங்கே பிடிக்கப்படுகின்ற மீன்களையெல்லாம் பாதுகாப்பதற்கு வழி இல்லாமல் ஏஜெண்டுகளுக்கு, குறைந்த விலையில் மீனவர்கள் விற்கின்ற ஒரு மோசமான சூழ்நிலை இருக்கிறது. ஆதலால் தேவைப்படும் பகுதிகளுக்கு அமைச்சர் அவர்கள் —cold storage— அதாவது, குளிர்பதன அறைகள் கட்டித் தருவதற்கான நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நிறுவப்பட்டிருக்கின்ற அந்தப் பனிக்கட்டி நிலையங்களெல்லாம் இப்போது பராமரிக்கப்பட்டு வந்திருந்தாலும், தனியாக போட்டி போட்டுக்கொண்டு, தனியார் நிறுவனங்கள் அமைத்து வருகின்றார்கள். அந்த அடிப்படையிலே, தனியாரே இதுபோன்று நடத்த முன்வருகின்றபோது அதற்கு அரசு நல்ல உதவிகளைச் செய்யும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா

அவர்கள், புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திலே மீன் சம்பந்தப்பட்ட தொழில்களைச் செய்வதற்கும், தொழிற்சாலைகள் அமைப்பதற்கான திட்டங்களையும் அறிவித்திருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் நீங்கள் தொழில் செய்ய முடியும் என்று சொன்னால், அதற்கான உதவிகளை இந்த அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அரசன் அவர்கள் சொல்லும்போது, சங்காயம் என்று சொன்னார்கள். சங்காயம் என்றால் என்ன என்பதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவைக்குக் கொஞ்சம் விளக்கமாகத் தெரிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொன்னவரிடம் கேளுங்கள். வினா எண் 92, திரு. பி.எம். நரசிம்மன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

92—

புதிய வட்டம்

***18710—திரு. பி.எம். நரசிம்மன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டத்திலிருந்து ஆர்.கே. பேட்டை, பாலாபுரம் மற்றும் எரும்பி ஆகிய பிர்க்காக்களைப் பிரித்து, ஆர்.கே.பேட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டமாக அறிவிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.